திராவிட சினிமா

ஆசிரியர்: ஏ.வி.பி.ஆசைத்தம்பி

படம் 1] உள்நாடு 1 அணு நிறுவனம்: 1955 (புதன் 5—9—56 சென்னை) வெளிநாடு 0—1—6 [காட்சி 5

காந்தி பெயரால் கள்ள மார்க்கெட் பேர பிசினஸ்!

"தமிழ் சினிமா" வின் தறுதலைப் போக்குக்கு சூடு

கருடபார்வை ஜனுப் கரீமுக்கு ஜனுப் ஷாகூல் ஹமீது சாட்டை!

எதை எப்படி வேண்டுமானாலும் எழுதி விற்பனை செய்து விடலாம் என்ற நம்பிக்கை அகிகமாகி விட்டது. ஒரு நக்ஷத்திரத்தின் அன்றாட வேலைகளில் புகுந்து ஆராய்ச்சி செய்ய முற்பட்டால் பத்திரிகை நிரம்பிவிடுமல்லவா? மேலும் யாராவது ஒரு பைத்தியக்காரன் எவனையாவது திட்டுகிறானென்றால் அதைஅறிந்து கொள்ளத் தமிழ் நாட்டில் சிலருக்கு ஆசை ஏற்பட்டுள்ளது. தமிழ் சினிமா ஆசிரியர் காந்தி வழி மூலம் கலை சேவை செய்வதாகக்கூறி கண்டதை எழுதி காசு சேர்க்க 'லோசு' போட்டுவேலை பார்க்கிறார்.

[illegible] வும் விசித்திரமானவர்கள் திட்டுகிறவர் யார் என்று பார்க்காமல் திட்டப்படுகிறவர்யார் என்பதையே கவனிக்கிறார்கள். உதாரணமாக, மு. கருணாநிதியை 'மு. க. வின் முட்டாள்தனம்' என்று மகுடமிட்டு முழுப்பக்கம் எழுதினாலும் விழுந்து விழுந்து படிப்பார்கள் நேயர்கள்! விஷயம் முழுவதும் அப்பட்டமான கற்பனையாயினும் அதைப் படிப்பதில் ஈடுபட்டு அந்தப் பத்திரி[illegible] மாறவழி செ[illegible]கள்!

கலைஞர் கருணாநிதியை மட்டும் எத்தனை இதழ்களுக்குத் தான் திட்டிக்கொண்டிருக்க முடியும்? ஒரே நபரின் மீது பார்வையைச் செலுத்தி எவ்வளவு காலத்திற்குப் புரளி செய்துகொண்டிருப்பது! ஆதலால் உடனே நமது வாசகர்களின் கவனத்திற்கு புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அனுப்பப்படுவார். தற்சமயம் மிகவும் பிரபலமாக விளங்கும் அவருடைய பழைய கால வாழ்க்கையை விஷயமாக எடுத்துக்கொண்டு விளாச ஆரம்பித்தால் விசித்திரமான வாசகர்கள் கூட்டம் வரவேற்குமல்லவா? எது எப்படிப் போனால் என்ன? யார் மனம் புண்பட்டால் என்ன? பத்திரிகை விற்பனையாகி துட்டு கைக்கு வந்து சேர்ந்தால் போதும். இதுவே தமிழ் சினிமாவின் லட்சியம்! காந்தி வழிவந்த பேனா என்று கழிசடைவிஷயம் எழுதும் ஆசிரியர் கூறுவது காந்தி பெயரால் மோசடி செய்வதாகும்.

வசன கர்த்தாக்கள், நடிகர்கள் படமுதலாளிகள் முதலிய பிரபலமான புள்ளிகளின் சரித்திரத்தை விசாரித்து வைத்துக் கொண்டு விளாச ஆரம்பித்தால் பத்திரிகையும் வேகமாக விற்பனையாகும். ஒரு கார் வாங்கிக் கொண்டு சென்னை வீதிகளிலே வேகமாக ஓட்டலாமல்லமா?

தமிழ்சினிமா ஆசிரியர் கரீம் அவர்கள் இந்த யாதிரியாகத் திட்டம் தீட்டிக் கொண்டு பத்திரிகைத் தொழிலில் குதித்து குட்டை குழப்பி வருகிறார். அவருடைய காந்தி வழி வந்த பேனா செய்யும் அஹிம்சைப் போர் இது தான் போலிருக்கிறது! தம் பிழைப்புக்காகப் பிறரைக் குறை கூறி மனம் நோகச் செய்வதுடன் தமிழ் வாசகர்களின் ரசனையை கீழ்த்தரமான விவகாரங்களில் ஈடுபடுத்துவது காந்தி வழியாகுமா என்று கேட்கிறேன். இந்தமாதிரி காந்தி வழியில் கலை வளர்ப்பவதாகப் புரளி செய்வதை கரீம் அவர்கள் அஹிம்சையின் மேல் ஆணையாக விட்டுவிடுவார் என்று நம்புகிறேன். அத்துடன் நடிகர்களின் பழைய கால வாழ்க்கை எவ்வாறு இருந்தாலென்ன, அவர்கள் கதர் ஜிப்பா போட்டுக் கொண்டு எந்த பஸ்ஸில் போயிருந்தால் நமக்கென்ன? அவர்கள் எந்த பாய்ஸ் கம்பெனியில் எத்தனை அணா சம்பளம் வாங்கியிருந்தாலும் அதற்காக ரசிகர்கள் அவர்களை திரையில் கண்டதும் கைதட்டி வரவேற்காமல் இருக்கப் போவதில்லை. ஒருவரிடம் இருக்கும் திறமையை உலகம் உணரும் போது நிச்சயம் யாருடைய பொறாமையும் புனைசுருட்டும் அவரை அசைக்கக்கூட முடியாது என்பதை கரீம அவர்கள் உணரவேண்டும். ஆனால் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டப்படி பிரபலமான புள்ளிகளைத் திட்டுவதின் மூலம் தாம் பிரபலமாகிக் கொள்ளலாம் என்ற திட்டத்துடன் அவர் பத்திரிகைத் தொழிலில் நுழைந்திருப்பதால் நிச்சயமாக இந்த இம்சை வழியைக் விட்டுவிலக மாட்டார் என்று நம்பலாம், தயவு செய்து அவர் தமது பேனாவை மட்டும் காந்தி வழி வந்த பேனா, என்று கூறி காந்தியின் பெயரைக் கெடுக்காமலிருக்க வேண்டும் என்பதே என் கோரிக்கை!

'வாழ்விலே ஒரு நாளில்' இந்த அழகு காட்சியைக் காணலாம்

'காப்பிக் கொட்டை' மேயர் என்றும் 'காப்பிக் கொட்டை' படம் என்றும் எழுத திரு. கரீம் அவர்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது என்று நினைக்கிறார் போலிருக்கிறது. அவர் தமது சொந்த வாழ்க்கையைக் கொஞ்சம் எண்ணிப் பார்த்திருந்தால் காந்தி வழிவந்த அந்தப் பேனாவைக் கையில் தொட்டிருக்க மாட்டார் என்பது உறுதி! பத்திரிகை நடத்துவதற்கு பொருளுதவி கோரி ஒரு கப்பிக்கொட்டை வியாபாரியை நாடியதும் அவர் மெல்ல நழுவிக்கொண்டதும் சில வருடங்களாகி விட்டதால் மறந்து போய் விட்டதோ என்னவோ! ஒரு வேளை அப்போதிருந்து கரீம் அவர்கள் காப்பிக்கொட்டையின் மீது கட்டுக் கடங்காத வெறுப்புக் கொண்டு விட்டார் என்று கருதவும் இடமுண்டல்லவா?

கோயமுத்தூர் பள்ளிவாசலில் அறை எடுத்து தாங்கிக் கொண்டு வாடகை தர முடியாமல் திணறிய காலத்தைதையும், 'டோபி'க்கு கூலி கொடுக்க முடியாமல் துணி

4-ம் பக்கம் பார்க்க

ராஜசுலோசனாவின் இந்த கவர்ச்சிகரமான தோற்றம் —'வாழ்விலே ஒரு நாளில்'

தென்னகத்தின் ஒரே ஒரு கலை வார ஏடு விலை 1 அணு

திராவிட சினிமா

ஆசிரியர்: ஏ.வி.பி.ஆசைத்தம்பி

புதன்தோறும் வெளிவரும் வார வெளியீடு

உள்நாடு சந்தா விபரம்

தனிப்பிரதி	1 அணா
ஆண்டு சந்தா	3 ரூபாய்

வெளிநாடு சந்தா விபரம்:

தனிப்பிரதி	1½ அணா
ஆண்டு சந்தா	4½ ரூபாய்

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்கப்படமாட்டாது

விளம்பர விபரம்:

முதல் பக்கம்:	1 கலம் × 1 அங்.	ரூ. 4
உள்பக்கம்:	1 கலம் × 1 அங்.	ரூ. 2
கடைசி பக்கம்:	1 கலம் × 1 அங்.	ரூ. 3

நீடித்த விளம்பரங்களுக்கு தக்க சலுகை உண்டு

ஏஜெண்டுகளுக்கு:

ஒவ்வொரு வாரத்துக்கும், தேவைப்படும் பிரதிகளை ஒவ்வொரு சனிக்கிழமைக்குள் எங்களுக்கு தெரிவித்துவிட வேண்டியது அவசியம்.

விபரங்கட்கு;
மானேஜர், "திராவிட சினிமா"
131, பிராட்வே, சென்னை-1.

சந்தி சிரிக்குது!

[illegible]டன் குரங்குப் புத்தி !

[சி]னிமா உலகில் ஒரு காலத்[தி]ல் கதை வசன கர்த்தாக்கள்-பாடுவோர்-பாடல்இயற்றுவோர்- ஆடுவோர் ஆடலமைப்போர்-நடிகர்கள்-டைரெக்டர்கள் உள்பட பிராமணர்களாக இருந்தனர்.

சுயமரியாதைக் கட்சியின் இடைவிடாத முயற்சியால் காலம் மாறியது. திரைப்பட உலகத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. புராணப்படங்கள் என்றால் பார்ப்பாரற்று இருக்கும் பரிதாபத்தில் ஏற்பட்டது.

கதை எழுதவா? வசனம் அமைக்கவா? பாடல் எழுதவா? பாட்டுப் பாடவா? ஆடல் அமைக்கவா? ஆடவா நடிக்கவா? ஆகிய அத்தனையிலும் பிராமணரல்லாததிராவிடர்கள் திறமையால் மேலோங்கி வந்து விட்டனர்!

பத்திரிகை துறையில்கூட ஆரிய ஆனந்த விகடனுக்கு நிகர் வேறு கிடையாது என்று இருந்த இறுமாப்பான நிலையை திராவிட 'குமுதம்' சுக்கு நூறாக நொறுக்கி விட்டது.

இந்த மாதிரியான இறக்க நிலை தனக்கும் தன் இனத்திற்கும் வந்து விட்டதே என்று ஆனந்த விகடன் வருந்தி மனம் புழுங்கி அடிவயிறு எரிய பொறுமை நெஞ்சை அறுக்க தான் கெட்டு விட்டதை மறைக்க காலம் கெட்டுப் போச்சே என்று தன்னலக்காரன் அலறியது போல 'இவர்கள் சந்தித்தால்' என்ற பெயரில் முன்அணியில் உள்ள திராவிடர்களை கற்பனையில்ஒன்று சேர்த்து ஒருவருக்கொருவர் ஏற்றத் தாழ்வு கற்பிக்கும் நாரத வேலையை ஆரிய ஆனந்தவிகடன் ஆரம்பித்துள்ளது.

திராவிட நடிகமணிகளான எம். ஜி. ராமச்சந்திரனையும் சிவாஜி கணேசனையும் கற்பனையில் ஒன்று சேர்த்து ஒருவருக்கொருவர் குரோத எண்ணம் கொள்ளும் அளவுக்கு குச்சி முறித்துப் போட விகடன் முயன்றிருக்கிறது!

ராஜா மந்திரி கதைகளிலே சரித்திர கால வீரனாகவே காட்சி அளித்து கச்சிதமாக நடிக்கும் எம். ஜி. ஆரையும் தமிழ்ப்பட உலகிலேயே குணச்சித்திர நடிகனாக மிளிரும் கணேசனையும் கேலியும் கிண்டலும் செய்து ஆறுதல் அடைய விகடன் முயற்சிப்பதோடு இப்படி கழிசடைத்தனமாக எழுதுவது மூலம் முன்போல் விலைபோகாத தனது சரக்கின் விற்பனையையும் உயர்த்திட முயற்சிக்கிறது.

எம். ஜி. ஆரைக் கேலி செய்து—சிவாஜி கணேசனின் சொந்தக் கொள்கையை சுட்டிக் காட்டிக் கண்டித்து எழுதுவதன் மூலம் இருசாராரின் பாராட்டுதலைப் பெறலாம் என்று விகடன் எண்ணுவதோடு—இரு சாராரையும் மோதவிட்டு, இடையே நின்று இரத்தம் குடித்து இழந்த இடத்தை மீட்டுதன் இனத்துக்குப் பட்டம் சூட்டிவிட விகடன் முயற்சிக்கிறது.

விகடரே! வேண்டாம் இந்த குரங்குப் புத்தி! ஆண்டாண்டு தோறும் நீர் அரும்பாடுபட்டாலும் அந்த ஆசை மட்டும் இனி நிறைவேறாது. கடந்த காலம் நிச்சயமாகத் திரும்பாது.

இரட்டைக் குழந்தை படகம்பெனி உம்மிடம் இருக்கிறதே! உம்மால் ஒரு எம். ஜி. ஆரை ஒரு சிவாஜியை உருவாக்க முடிந்ததா? கேவலம் நல்ல தமிழ்ப் படம் எடுக்க நாதியற்றுபோய் வடநாட்டு படமெடுக்க ஆரம்பித்துவிட்ட விகடனே உமது கம்பெனியில் இருந்து இது வரை எம். ஜி. ஆரைப் போல சிவாஜி போல சிறந்த நடிகரை உற்பத்தி செய்ய முடிந்ததா? பெரிய கதை இலாகாவை கட்டி அழுகிறீரே, இளங்கோவனைப் போலவோ—கருணாநிதியைப் போலவோ, ஒரே ஒரு வசன கர்த்தாவையாவது உற்பத்தி செய்ய முடிந்ததா?

மாலை தொடுக்கத் தெரியாவிட்டாலும் தொடுக்கப்பட்ட மாலையை பிய்த்தெரியும் குரங்கு புத்தி இருப்பதாலேயே, கணேசன். எம். ஜி. ஆர். கிண்டலுக்கு அப்புறம் கருணாநிதி இளங்கோவன் மீது தாவி இருக்கிறீர்! இரும்! இரும்! அடுத்த வாரம் கவனிக்கிறேன்.

Stewart Granger, as a buffalo hunter of the 1880 Dakota Territory, and Debra Paget, as the Indian girl whom he champions in "The Last Hunt," M-G-M's spectacular CinemaScope drama of the men who hunted down the last of America's great buffalo herds. Robert Taylor plays Granger's formidable rival, with Lloyd Nolan and Russ Tamblyn also starred.

'தி லாஸ்ட் அண்ட்' என்ற இப்படம் எம். ஜி. எம். யின் தயாரிப்பாகும். சுவை மிக்க இப்படத்தில் 'டெப்ரா பாகெட்' இந்திய பெண்ணாக நடிக்கிருள்.

பத்துப் படங்களில் குழந்தை நட்சத்திரம் உமா

ஏற்கனவே 15 படங்களில் தோன்றியுள்ள இந்த உமா தற்பொழுது ரங்கோன்ராதா, கன்னியின் சபதம், சம்பூர்ண ராமாயணம், தோழன், அவன் அமரன், அண்ணன் அண்ணி. புதுமைப்பித்தன் ஆகிய தமிழ் படங்களிலும், பக்த மார்கண்டேயர், [illegible] ஆகிய தமிழ்கன்னட, தெலுங்கு படங்லும் பக்த ஒகிலய்யா தெலுங்கு கன்னட படத்திலும் நடிதது வருகிருள்.

எம். ஜி. ஆர். பேச்சை கரீம் கேட்டார் !

உண்மையான செய்திகளை அறிந்து வெளியிடுவதில் அக்கறை காட்டுங்கள் !

தென்னக சினிமா பத்திரிகையாளர் சங்க கூட்டத்தில் புரட்சிநடிகரின் சொற்பொழிவு

தென்னிந்திய சினிமா பத்திரிகையளர் சங்கத்தின் ஆதரவில் 30-8-56 அன்று சென்னை நீயூ உட்லண்ஸ் ஹோட்டலில் திரு. எம். ஜி ராமச்சந்திரனுக்கு ஒரு விருந்து உபசாரம் நடத்தப்பட்டது, சினிமா பத்திரிகையாளர்பெரும்பாலோர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். தமிழ் சினிமா ஆசிரியர் ஏ. கரீமும் இவ் விழாவுக்கு வந்திருந்தார்.

இக்கூட்டத்தில் சினிமா பத்திரிகையாளருக்கும் நடிகர்களுக்கும் இருக்க வேண்டிய நல்லெண்ண உறவு பற்றி பேசியிருப்பதோடு பத்திரிகையாளர் சங்கம் எம். ஜி. ஆர்—கரீம் விவகாரத்தில் ஒரு சமரஸதுக்கு முயற்சி செய்ததாகவும் தெரிகிறது.

சங்கத்தின் காரியதரிசிபேசுகையில், சினிமா பத்திரிகையாளர்களுக்கும், சினிமா நடிகர் நடிகைகளுக்கும் இருக்க வேண்டிய சுமூகமானஉறவை பற்றி வற்புறுத்தித் தெரிவித்தார்.

இந்த உபசாரத்துக்குப் திரு. எம். ஜி. ஆர் நீண்ட நேரம் பேசி பதிலளித்திருக்கிருர்.

அவர்பேசுகையில், தம்மைப் பற்றி அவதூறு கூறும் வகையில் செய்திகள் சிலபத்திரிகைகளில் வெளிவருவதை எம். ஜி. ஆர். நல்லெண்ண உணர்ச்சியோடு கண்டித்திருப்பதாக தெரிகிறது. தம்மைப் பற்றியோ அல்லது வேருெரு வரைப்பற்றுயோ செய்திகள் வெளியிடுவதற்கு முன் அந்தச் செய்திகள், (கேள்விப்படும் செய்திகளாக இருக்கும் பட்சத்தில், [illegible] அறிந்து கொள்ள [illegible] செய்திகளாக [illegible] பட்சத்தில்) சரிதானு [illegible] சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டுபத்திரிகைகளில் வெளியிட பத்திரிகையாளர்கள் முயல வேண்டும், அதுதான முறை என்று வலியுறுத்திச் சொன்னதாகவும் தெரிகிறது.

சினிமா பத்திரிகையாளர் சங்கம் ஆதரவில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆருக்கு நடைபெற்ற விருந்து உபசாரத்தில் எடுக்கப்பட்ட படமாகும் இது. மாலையுடன் காட்சி தரும் எம். ஜி. ஆருக்கு பக்கத்தில் தலை [illegible]ந்தபடி நிற்பவர்தான் தமிழ் சினிமா கரீம். எம். ஜி. ஆருக்கு மற்றொரு பக்கத்தில் இருப்பவர் சங்க செயலாள[ர்] "பார்த்தா" மற்றும் ஸ்கிரின், பேசும்படம், தின[illegible] [த]மிழ் நாடு ஆகிய பத்திரிகைகளின் பிரதிநிதிகளும் [illegible]ளனர்.

மக்களுக்கு மூடநம்பிக்கைகளை புகட்டக்கூடியதும், பகுத்தறிவுக்கு ஒத்துவராததுமான படங்களில் தாம் நடிக்க சம்மதிப்பதில்லை என்ற கொள்கையுடையவன் நான் என்பது தெரிந்த விஷயந்தான். அது காரணமாக நான் சமீபத்தில் 'விக்ரமாதித்தன்' கதையில் நடிக்க வந்த சந்தர்ப்பத்தை மறுத்து விட்டேன். மறுத்த இந்த விஷயத்தை பத்திரிகைகள் பெருந்தன்மையோடு செய்தி சொல்ல வேண்டுமே தவிர தமக்குரிய கொள்கைகளை வைதது தீர்ப்பு கூறும் வகையில் கற்பனையில் அதை திரித்து செய்து சொல்வது நன்ருயிருக்காது!' என்று பேசியிருப்பதோடு, லலிதாங்கி, அலிபாபா விஷயமாகவும்பிரஸ்தாபித்துப் பேசி இருக்கிருர்.

லலிதங்காகியின் மூன்று 'ஸ்கிரிப்ட்'டுகள் தம்மிடம் இருப்பதாதவும் மூன்ருவது 'ஸ்கிரிப்ட்'படி படம் எடுக்க வேண்டும் என்று இருந்தும், படாதிபதியின சம்மதககுறைவினல் விவகாரம் வளர்ந்து விட்டதாகவும் தெரிவித்து, தான் எந்த விதத்திலும் படாதிபதிகளுக்கு தொந்தரவு கொடுக்கும் நோக்கம் கொண்டவன் அல்ல' என்று விவரமாக விளக்கியிருப்பதாகவும் தெரிகிறது.

எந்த செய்தியையும் அவசரப்பட்டு திரித்தோ, தவருன செய்தியால் கவர முயற்சிக்கும் போக்கோ பத்திரிகைகளின் நேர்மையான தன்மைக்கு பங்கம் விளைவிக்குமாதலால், பததிரிகையாளர்கள் அவசரப்படாமல், நிதானம் தவருமல் உண்மை அறிந்து விஷயத்தை வெளியிட வேண்டும் என்று கூறுவதைத்தான்இன்றையமுக்கிய விஷயமாக நான் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன் என்று உபசாரததின்போது எம். ஜி. ஆர் மனமுருக சொல்லி இருப்பதாகத் தெரிகிறது,

பத்திரிகையாளர்கள் பெரிதும் ரசித்து வரவேற்பளித்த அந்த பிரசங்கத்தை திரு. கரீமும் கவனத்தோடு கேட்டு மகிழ்ச்சி கொண்டதாக தெரிகிறது.

எம். ஜி. ஆரின் இந்த நல்லெண்ண சொற்பொழிவை பத்திரிகைகள் பின்பற்றுவதோடு, தமிழ் சினிமாவும், தமது போக்கில் மாறுதல் காட்டி 'பத்திரிகை தர்மம்' அனுஷ்டிக்க முன் வரும் என்று நம்பலாம்.

Lovely Lana Turner is appropriately cast as "the most beautiful woman in 16th century Europe" in "Diane," M-G-M's vibrant love story centering on the turbulent romance of Diane de Poitiers and the impetuous French Prince Henri. Roger Moore plays the handsome prince of the story, with other stellar roles filled by Pedro Armendariz, Marisa Pavan and Sir Cedric Hardwicke. The picture, filmed in CinemaScope and color, gives Miss Turner the most breath-taking and costly wardrobe she has ever worn for a film role.

'எம். ஜி. எம்'ன் 'டேனி என்ற படத்தில் லானு டர்னர் தற்சமயம் தமிழ் நாட்டில் பல இடங்களில் இது நடைபெறுகிறது.

வெட்கம்! வெட்கம்!

தெள்ளிய நீருக்குள்ளிருக்கும் சிலையைப் போல
தேகமெல்லாம் வெளிக்காட்டிப பெயருக்காக
உள்ளறையில் மார்பாகத்தில் ஓர்சாண ஆடை
ஒட்டுறவே உடம்போடு இறுகக் கட்டி
துள்ளிவரும் மான்போல் பாய்ந்தால் மங்கை
துடிப்போடு காதலனும் தழுவிக் கொண்டான்
தெள்ளமுதச் செவ்விதழில் இதழைச் சேர்த்தான்
தெவிட்டாத தேனெனவே சுவைத்து நின்ருன்.

விள்ளறிய இக்காட்சி தன்னை மக்கள்
வெண் திரையில் ஆங்கிலத்தில் கண்டபோது
கள்ளின்வெறி யேறியவர் போலக் கூவி
கைதட்டி ஆர்ப்பரித்தார் இளைஞரெல்லாம்
வெள்ளை மனம் கொண்டசிலர் தலைகுனிந்து
வெறுத்தார் போல் கடைக்கண்ணுல் காணலுற்ருர்
பள்ளிபயில் மாணவர்கள் மூச்செறிந்து
பணிப் பாறை போல் நெஞ்சம் உருகலுற்ருர்

சள்ளைதரும் சம்சாரச் சந்தைதனில்
சங்கடங்கள் பட்டுழலு மாந்தருக்கு
கொள்ளையடா இக்காட்சி என்று சொன்னுர்
குவலயத்தை சீர்திருத்த முனைந்த வீரர்
கிள்ளைமொழிப் பூங்கோதை ஒருத்தி மெத்த
கிராமத்தின் பண்பாட்டில் வளர்ந்த மங்கை
மெள்ள முணுமுணுத்திட்டாள் "வெட்கம் வெட்கம்"
மேல் நாட்டின் ஆசாரம் விரசமென்ருள்

அழகுதிகழ் நவ நாவீக 'மாடல்'
அலங்காரக் காதலர்கள் இருவர் சொன்னுர்
"பழகு தமிழ்ப் படங்களிலே இதுபோல் காட்சி
பல சேர்க்க வேண்டுமதில் தீமையில்லை
தழலென்ருல் நா வெந்து போமோ, ஆண்-பெண்
சரி நிகராய் உரிமையுடன் வாழ்வதற்கு
பழையகதைக் குப்பைகளில் மார்க்கமில்லை
படக்கலைதான் துணிந்து வழிகாட்ட வேண்டும்."

போர்வீரன் வாள்தனிலும் வலிமை கொண்ட
புதுப்"பார்க்கர்" பேனவைக் கரத்திலேந்தி
சீர் ஓங்கத்தமிழ் நாட்டின் பெருமைதன்னை
சிறப்பாக எழுத்துருவில் வடித்துக்காட்டும்
"தார்மீக சிற்பி"யிதைக் காதால் கேட்டான்
தனல் மாரிப் பெய்தாற்போல் துடிதுடித்தான்
ஊர்காணப் பெண்மையெனும் உயர்ந்தபண்பை
உலையிட்டுத் தீய்ப்பதற்கா வரவேற்பென்ருன்

—மாயூரம் ராஜகோபா[ல்]

நாட்டில் நல்லறிவை பரப்பி வரும் ஏடு
5, 20 தேதிகளில் வெளிவரும்
மாதம் இருமுறை

ஜனயுகம்

ஆசிரியர்: மயிலைநாதன் விலை 2 அணா

எங்கும் ஏஜண்டுகள் தேவை

விவரங்கட்கு. நிர்வாகி, "ஜனயுகம்" சென்னை-1

சின்னவயதில் தன் தாய் தந்தையர்களை இழந்து உலகத்தின் அகண்ட கரத்திலேதாலாட்டப்பட்டு வளர்ந்து ஒருகயவனின் கொடுமைக்கு ஆளாகி வாழ்நாளெல்லாம் கண்ணீர் சிந்திய இரு ஜீவன்களின் சோகக்கதை.

செய்யாத குற்றத்திற்காக சிறை தண்டனை பெற்ற தந்தையைக் கைது செய்யும் தனையனின் பரிதாப நிலை, சாவின் முனையில் காதலர்களின் சந்திப்பு, இத்தனையும் விளக்கும் உணர்ச்சி சித்திரந்தான் இது !

மெர்குரி பிலிம்ஸின்

"வாழ்விலே ஒரு நாள்"

திரைக் கதை சுருக்கம்

கதை வசனம்:
ஆசைத்தம்பி

டைரக்ஷன்:
காசிலிங்கம்

நடிகர்கள்:
சிவாஜி கணேசன், ஸ்ரீராம்,
ஜி. வரலக்ஷ்மி ராஜசுலோசனு,
வி. கே. ராமசாமி,
பிரண்ட் ராமசாமி, திருப்பதிசாமி
முதலானேர்

வாழ்விலே ஒரே ஒரு நாள் மட்டும் ஒன்று சேர்ந்த அந்த இளந்தம்பதிகள் மறுநாளே பிரிக்கப்பட்டனர். இருபது வருடங்களுக்கு அப்புறம் ஒன்று சேர்ந்தனர்.

வாழ்ந்தார்களா?

வாழவந்தார் தான் வாழ விட்டானு? தன் வீட்டு வேலைக்காரியான ஜானகியை வாழவந்தார் கற்பழிக்க முயன்ருன். ஜானகியின் கணவன் கண்ணன் ஆத்திரமடைந்து வாழவந்தாரை த்தாக்கினன். கர்பவதி ஜானகியும் கண்ணனும் வாழவந்தாரைக் கொன்று கொள்ளையடிக்க முயன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டனர். சிறையில் அடைக்கப்பட்டனர். முத்து என்ற குழந்தைக்கு சிறையிலேயே ஜானகி தாயானுள்.

வழக்கு மன்றத்திலே விசாரணை நடந்தது. கண்ணனுக்கு ஏழு வருடங்களும் ஜானகிக்கு ஆறு வருடங்களும் தண்டனை விதிக்கப்பட்டது. பச்சைக்குழந்தை முத்து, தாய் தந்தையை விட்டுப் பிரிக்கப்பட்டு சென்னை அழகிரி அனதை விடுதியில் சேர்க்கப்பட்டது.

சிறை செல்லும் போது தப்பித்த கண்ணன் வாழவந்தாரைக் கொல்ல வரும் போது பிடிப்பட்டு சிறைக்கே செல்கிருன். காலம் சுழலுகிறது. அனதைவிடுதியில் இருந்த பையன் முத்து தாயைத் தேடி விடுதியை விட்டுப் புறப்பட்டுவழிபறித் திருடன் ஒருவனை தீரமாகப் பிடித்துக் கொடுத்ததற்காகப் பாராட்டப்பட்டு, சீர்திருத்தப் பள்ளியிலேயே பெரிய வனுகும் வரை கல்வி பயில உத்திரவிடப்படுகிருன்.

ஆறுவருடங்களுக்கு அப்புறம் சிறையில் இருந்து விடுதலை அடைந்த ஜானகி தன் மகன் முத்து அனதை விடுதியில் இல்லாமை கண்டு நாடகக் கம்பெனி ஒன்றில் சேர்ந்து, கலாதேவி என்ற பெயரில் நட்சத்திர மாகிருள். ஆனுல்—

கண்ணன் சிறை விடுதலைக்குப் பின் வாழவந்தாரைப் பழிவாங்க கள்வர் கூட்டத்திலே சேர்ந்து பெரிய கேடி ஆகிறன்.

ஆனுல் முத்து?

போலீசிலே சேர்ந்து தன் திறமையிலே முன்னேறி சப் இன்ஸ்பெட்டராக மாறி, கண்ணன் கோஷ்டியைப் பிடிப்பதற்கேன்றே நியமிக்கப்படுகிருன்.

வாழவந்தார் மகள் லட்சுமியின் பிறந்ததின விழாவுக்கு சப்இன்ஸ்பெக்டர் முத்து வந்திருந்தும் கண்ணன் கோஷ்டியினர் புகுந்து கொள்ளையடிக்கின்றனர். சப்இன்ஸ்பெக்டர் முத்து கண்ணன் கோஷ்டியைப் பிடிக்க தீவிர முயற்சி எடுக்கிருர்.

வாழவந்தார் குணதிசயங்களை அறியவும்—வாழவந்தாருக்கு பாதுகாப்புச் செய்யவும்—கண்ணனைப் பிடிக்கவும்-சப் இன்ஸ்பெக்டர் முத்து வேலைக்காரன் வேஷத்தில் முருகன் என்ற பெயரில் வாழவந்தார் விட்டில் சேருகிருர்.

வாழவந்தார் மகள் லட்சுமியும் சப் இன்ஸ்பெக்டர் முத்துவும் ஒருவரை ஒருவர் காதலிக்கின்றனர். காதல் தூதாக முருகனையே லட்சுமி அனுப்புகிருள்.

அப்போது லட்சுமியை கள்வர்கள் தூக்கிச் செல்கின்றனர். பின்பற்றிச் சென்ற சப் இன்ஸ்பெக்டர் முத்து லட்சுமியை காப்பாற்றியதோடு கள்வர்களையும் பிடிக்கிருர்.

பட்டாணியின் வேஷத்தில் வாழவந்தாரோடு நண்பனுக பழகி, பழிவாங்க அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்ததால் போலிசாரிடம் கண்ணன் சிக்க வில்லை.

நாடக நடிகை கால தேவி தான் ஜானகி என்பதை அறிந்த வாழவந்தார் அவளைத் தந்திரமாகத் தூக்கி வருகிருன். கலாதேவி தான் தன் தாய் என்பதை அறிந்த சப் இன்ஸ்பெக்டர் முத்து வேலைக்கார முருகன் வேஷத்தில் காப்பாற்ற வருகிருர்.

ஆனுல், ஜானகியை வாழவந்தார் கற்பழிக்க முயலும் போது கண்ணன் வந்து விடுகிருன். இருவருக்கும் பயங்கரச் சண்டை நடக்கிறது. வாழவந்தாரை கண்ணன் குத்தி வீழ்த்துகிருன். இருபது வருடங்களுக்கு அப்புறம் தம் அன்பு மனைவியை கண்ணன் சந்திக்கிருன்.

ஆனுல்-

முத்துவால் கண்ணன் கைது செய்யப்படுகிருன். முத்து தன் மகன்தான் என்பதை உணர்ந்த ஜானகி, "தந்தையை நீயா கைது செய்வது?" என்று கேட்டு விடு தலைக்கு மன்ருடுகிருள்.

முத்து என்ன செய் தான்? தந்தைக்காக கடமை மறந்தானு? மகனுல் கைது செய்யப்பட்ட கண்ணன் என்ன செய்தான்? கணவனுக்கும்மகனுக்குக்கும் இடையே நின்ற ஜானகி என்ன செய்தாள்?

இந்த வினக்களுக்கு விடை என்ன?

உங்களூர் வெள்ளித்திரை இதற்குப் பதில் அளிக்கும்.

LOVE ON A PLANET . . . An unearthly romance takes place in "Forbidden Planet" when Anne Francis, dwelling on a remote planet in 2200, A.D., falls in love with Leslie Nielsen, commander of a space ship. Walter Pidgeon co-stars in M-G-M's first science-fiction drama, filmed in CinemaScope and color.

எம். ஜி. எம்.'மின் 'லவ் ஆன் ஏ பிளானட்' என்ற படத்தில் ஒரு காட்சி

படியுங்கள் பதிலை!

கலை, சமூகம், அரசியல் சம்பந்தமான கேள்விகள் வரவேற்கப்படுகின்றன. சினிமா நட்சத்திரங்கள் பற்றி கேட்கப்படும் கேள்விகளுக்கு ஒரு வரம்பு உண்டல்லவா, அது கவனிக்கப்பட்டால் போதும். நகைச்சுவைக்காக அளிக்கப்படும் பதில்கள் எவர் மனதையும் புண்படுத்தும் நோக்கம் கொண்டவை அல்ல.

எஸ். சுப்பையா, கவர்கல் தோட்டம்

சிவாஜி கணேசன் தற்போது எத்தனைப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

ஏறத் தாழ இருபது படங்களில்.

எம். எஸ். அமீது கோவை

ஏற்படும் கஷ்டத்தையும், சூழ்ச்சியையும், எதிர்ப்புகளையும் சமாளித்துக் கொண்டு பொறுமையோடு இருப்பவன் கடைசியில் என்ன ஆவான்?

'இரும்பு உள்ளம்' படைத்தவன் ஆவான்'

வி. நாகன் குமார், சேலம்

லலிதாங்கி விஷயத்தில் எம். ஜி. ஆர்—வசன கர்த்தா தஞ்சை ராமய்ய தாஸ் மனஸ்தாபம் விஷயம் என்ன ஆயிற்று?

கடிதப் போக்கு வரத்துடன் இருக்கிறது!

ச. கோ. சங்கரராசன், கமுதி

பெண் என்றால் பேயும் இரங்கும் ஆண் என்றால்...?

பெண் இரங்குவாள்!

ஆர். எஸ். ராஜன், அனுப்பானடி

டி. ஆர் மகாலிங்கத்துடன் பானுமதி நடிக்காததின் மர்மம் என்ன?

மர்மமாவது மண்ணாங்கட்டியாவது! இதுவரை எந்த படாதிபதியும் ஜோடி சேர்த்து விடாததால்! என்றாலும் மகாலிங்கம் தாம் எடுக்கும் ஒரு படத்தில் பானுமதியோடு நடிப்பார் என்று தெரிகிறது.

அர்த்தநாரி நாமக்கல்

அண்ணாவின் பார்வதி பி. ஏ. சினிமாப்படம் ஆகுமா?

ஆகலாம்!

மா. அரங்கசாமி, கோவை

வெள்ளிக் கேடயம் பெற்ற நடிகை எந்தப் போருக்கு ஆயத்தமாகிறார்?

வெள்ளித் திரைப் போருக்கு!

இன்றைய நடன நங்கைகளின் அரங்கேற்றம் யார் முன்னிலையில் நடைபெறுகிறது?

மந்திரிகள் முன்னிலையில்!

எம். என். ராஜத்திற்கு எப்பொழுது மறுமணம்...?

பொறும்! பொறும்!

மு. பகாவுதீன், திருநெல்வேலி

இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் முகவரியைத் தெரிவிக்கவும்?

11, வெங்கடரத்னம் ரோடு, மதராஸ்-18.

என். மணி, தில்லை

நான் பெற்ற செல்வம் எவர் செல்வம்?

தாங்கள் பெற்ற செல்வத்தில் தங்களுக்கு ஏன் இந்த சந்தேகம்?

பி. செல்லப்பா, திருநெல்வேலி

லலிதா, பத்மினி; விலாசம் என்ன?

60, எட்வர்ட் எலியட்ஸ் ரோடு, சென்னை.

அவர்கள் கையெழுத்துப் புத்தகத்தை அனுப்பினால் கையெழுத்துப் போட்டு அனுப்புவார்களா?

ஒப்பந்தப்பத்திரத்தில் ஒரு கையெழுத்துக்காக, 30. 40 ஆயிரம் வாங்கும் அவர்கள் உங்களுக்காக கையெழுத்துப் போட்டால் ஒரு தம்பிடிகூட வாங்க மாட்டார்கள் என்று மட்டும் எனக்கு தெரியும்!

பா. லக்ஷ்மணன், மதுரை

தமிழ்ப் படங்களில் நடிப்பில் திருவாளர்கள் ஜெமினி கணேசனும் சிவாஜி கணேசனும் தலை சிறந்தவர்கள் தான். ஆனால் இருவர்கள் நடிப்பையும் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, ஜெமினி கணேசனே மேம்பட்டவர் என்பது என்கருத்து. உங்கள் அபிப்பிராயம் என்ன?

ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து சிவாஜி மேம்பட்டவர் என்பதுதான் நம் கருத்து.

பா. நடராஜன், கோவை

சினிமாக் கலைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

மக்களுக்குப் சரியாக பயன்படும் கலையாக இன்னும் படாதிபதிகள் அதை 'ஆக்கலை'!

ஷேக்ஸ்பியர், பெர்னாட்ஷா ஆகியவர்களைப் போல சிறந்த நாவல் கதைகளை இயற்றுபர்கள் தற்போது நமது நாட்டில் யார் யார்?

எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள. ஒருமுறை கல்கி, அண்ணாவை 'தமிழ் நாட்டு பெர்னாட்ஷா' என்று சொல்லியிருப்பது தங்களுக்குத் தெரியாதா?

முதல் பக்கத் தொடர்ச்சி...

துவைத்த காட்சியையும் செம்பிலே நெருப்பை அள்ளிப் போட்டு நூதனமான முறையில் 'இஸ்திரி' போட்ட விந்தையையும் மறக்காமல் இன்னும் சிரித்துக் கொண்டிருக்கும் தமிழ் சினிமா' ஆசிரியரின் நண்பர்கள் எத்தனையோ பேர் இருக் இருக்கிறார்கள். விஷயம் இப்படியிருக்க, ஒரு பத்திரிகையும் பேனாவும் கையிலிருப்பதால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்என்று கருதி, பிறரை, மனம் போன போக்கில் தூஷிப்பதை இனிமேலாவது நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரைப்பட வளர்ச்சியில் மற்றொரு புதுமுறை

பரந்த வெண் திரையில் தத்ரூபமாக காட்சிகளைக் காணுவதிலும் பேசும் ஒலிகளை சூழ் நிலைக்குத் தக்கபடி கேட்பதிலும் ஓரளவுக்கு உதவிய 'சினிமாஸ் கோப்' முறையைவிட இப்பொழுது ஒரு புதிய முறை திரைப்பட வளர்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

'டைனமிக் பிரேம்' என்ற இந்த புதுவித படக்காட்சி முறையில் சந்தர்ப்பத்திற்கு கேற்றவாறு திரையின் பரப்பும் உருவமும் மாறுகிறதாம். உதாரணமாக, ஜன நடமாட்டம் இல்லாத ஒரு தெருவில் நடந்து செல்கிறான் பையன் திடீரென ஒரு சந்தில் நுழைகிறான் அப்போது படமும் சந்து மாதிரி குறுகிவிடுகிறது அகன்ற திரையில் அடைப்பட்டது போன்றெண்ணி பையன் திணறுவதை இதன் மூலம் நன்கு சித்தரிக்கலாமாம்.

பேசும் பட வெள்ளி விழா

இந்திய பேசும் பட வெள்ளி விழா செப்டம்பர் மூன்றாவது வாரத்தில் கொண்டாடப்படவிருக்கிறது. டில்லியில் 21-ந் தேதியில் பிரதம மந்திரி நேருஜி இந்த விழாவைத் துவக்கிவைக்க இருக்கிறார். பிற்பாடு பம்பாயிலும், சென்னையிலும் இவ்விழா நடைபெறும்.

'வாழ்விலே ஒரு நாள்' சிவாஜி கணேசனும், ஜி. வரலட்சுமியும்

மூன்றாவது இதழ் விற்பனையாகிறது!

வலுவான கொள்கைகளை
தெளிவான முறையில்
பொலிவு குன்றாமல்
மலிவான விலையில்தரும்

ஒரே வார ஏடு

"அண்ணா"

ஆசிரியர்: வெற்றிவீரன்

8 பக்கங்கள் விலை 1 அணா

ஆண்டு சந்தா ரூபாய் 3

முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை

விவரங்களுக்கு:

அண்ணா, சென்னை-4.

எல்லைக்கப்பால்

பால்ராஜ் சகானியின் படம்

படங்களை டைரக்ட் செய்வதிலும் தம் கைவரிசையைக் காட்டுவதென முடிவு செய்திருக்கிறார், பிரபல நடிகர் பாலராஜ் சகானி. 'லால் பட்டி' என்ற படத்தை அவர் முதன் முதலின் டைரக்ட் செய்யப்போகிறார். அவரே எழுதியுள்ள இககதை ஆறே மணி நேரத்தில் நடக்கும். நிகழ்ச்சிகளைப்பற்றியதாம். இதில் அவர் தவிர தூதன், மாலா ஸின்ஹா ஆகியோர் நடிக்கின்றனர். பால்ராஜ் சகானி 'தேபிகா ஜமீன' என்ற புகழ் பெற்ற படத்தின் கதாநாயகன் என்பது நேயர்கள் அறிந்ததே. பொதுவுடைமை கொள்கையில் மிகுந்த பற்றுள்ள அவரது இந்த சிருஷ்டி ஒரு முறபோககு அம்சமாகத் தான இருக்கு மென்பதில சந்தேகம இல்லை!

'அதுதான் வேணும்'

பிரகாஷ் புரொடக்ஷன் சாரின் 'அந்தே காவாலி' என்ற தெலுங்கு படத்தை ஜோஷி என்பவா 'அதுதான் வேணும்' என்ற தலைபபில தமிழில் 'டப்' செய்ய ஆரம்பித்திருக்கிறார். ஸ்ரீராம்,ஜி. வரலக்ஷமி, சி, எஸ். ஆர். சூரியகாந்தம், ரமணா ரெட்டி ஆகியோர் நடிக்கும் இப்பட தமிழ் வசனங்களை தஞ்சை கே. கோவிந்தன் எழுதி இருப்பதாகத் தெரிகிறது.

டைரக்டர் சுப்ரமணியத்தின் கன்னட கச்சதேவயாணி

நெப்ட்யூன், நியூடோன், ரேவதி ஸ்டூடியோக்களில் வெகு மும்முரமாகபடமாக்கப் பட்டுவரும் சுப்ரமணியத்தின் கன்னட கச்சதேவயாணி செப்டம்பர் மாத இறுதியில் வெளி வந்து விடும் என்று தெரிகிறது, இதில் அஸ்வத், பி. சரோஜா தேவி, சம்பத், மஹிபாலா ராவ். ஜூனியர் இரணியய்யா ஆகியோர் நடிக்கும் இப்படத்தின் வசனத்தை நரேந்திர பாபு எழுதியிருக்கிறார்.

டைரக்டர் சுப்பரமணியத்துக்கு வெற்றி தநத படங்களில் தமிழ் கச்சதேவயாணியும் ஒன்று என்பது நேயர்கள் அறிநததே,

பாலையா, அஞ்சலி காஷ்மீர் போகுறார்கள்

பாலையாவின ஜயசக்தி பிக்சர்சாரின் அலாவுதினும அறபுத தீபமும் என்ற படம் வெகு வேகமாக வளர்நது வருகிறது. இப்படத்திறகான வெளிப்புரக் காடசிகள் சில வற்றை காஷ்மீரில் எடுகக டி. எஸ். பாலையா இம்மாதம 15-ந்தேதி காஷ்மீர் போகிறார் எனபதாகத தெரிகிறது! இநத கோஷடியில் அஞ்சலி, ஏ. நாகேஸ்வர ராவ் ஆகியோருடன படப்பிடிப்பு சமபந்தப் பட்டவர்களும், ஒலிப்பதிவு டெக்னீஷியன்களும போகின்றனா.

மகாலிங்கம் படத்தில் பானுமதி

டி. ஆர். மகாலிங்கம்கோமதி பிகசாஸ் என்ற பெயரில் ஒரு படக்கம்பெனியை ஆரம்பித திருக்கிறார். இந்த கமபெனி 'அல்லிஅர்ஜுனா'வைபடமாக்கும். சென்ற வாரத்தில் இதற்கான சில நடிகர்கள் ஒபபநதமாகி இருப்பதாகத் தெரிகிறது. பானுமதி, பிரேம் நசீர், கலைவாணா, டி. ஏ. மதுரம், சாரங்கபாணி ஆகியோர் ஒப்பந்தமாகி இருபபதாக நிச்சயமாகத் தெரிகறது. பானுமதி அல்லியாகவும், பிரேம் நசீர் அர்ஜுனனாகவும்,மகாலிங்கம் கிருஷணனாகவும் நடிப்பார்கள எனறும் தெரிகிறது. மகாலிங்கத்தின் தெருப்பாடகனும் இதற்கிடையே வளர்ந்து வருகிறன.

'துரோகி' தமிழாகிறது

ஜன் ஜன் முவிடோனார் பிரபல தெலுங்கு படமான 'துரோகியை' தமிழில் 'டப்' செய்ய இருப்பதாகத் தெரிகிறது. இநதப் படததில் ஜி. வரலக்ஷமி, லக்ஷமிராஜ்யம் பிரசாத், பிரகாஷ் ராவ் சிவ ராவ், குடும்ப ராவ் ஆகியோர் நடித்துள்ளனர். இப்படத்தை பிரசாத்டைரக்ஷன்செய்திருத்பது நினைவிருக்கும். தீபாவளி ரிலீசாக இப்படம் வருவதற்கான துரித முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. தமிழ் வசனத்தை எஸ், ஏ. சுப்பராமன் எழுதியிருக்கிறார்.

ஆசிரியர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பியால் விருதுநகர், காந்தி பிரிண்டர்சில் அச்சிடப்பட்டு, 131, பிராட்வே, சென்னை-1 லிருந்து வெளியிடப்படுகிறது.